**கம்பஹா மாநகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 ஆகஸ்ட் 02 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 செப்டெம்பர் 13 ஆந் திகதியன்றும் அனுப்பப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வத்தளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குகேற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து மீளாய்வாண்டின் போது நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 348,510 பெறுமதியுள்ள இயந்திர சாதகங்களும் உபகரணங்களும் மற்றும் உபகணனிகளும் பெறுமதி மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை. | பிழையின்றி கணக்கிலிடப்பட்ட வேண்டும் | இச் சொத்துக்கள் 2019 ஆம் ஆண்டின் போது நிலையான சொத்துப் பதிவேட்டிலும் கணக்கிலும் இடப்படும். |
| (ii) | முன்னைய 3 ஆண்டுகளின் போது சபை நன்கொடையாகப் பெற்றிருந்த ரூபா 8,779,400 பெறுமதியான 03 வானனங்களைச் சுவீகரித்துக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துரிமை பெறப்பட்டு கணக்கிலிடப்பட வேண்டும். | சிக்கல்களை நகரசபை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (iii) | இரண்டு செயற்திட்டங்களுக்கு ரூபா 55,627 குறைவாகவும் 3 செயற்திட்டங்களுக்கு ரூபா 313,443 கூடுதலாகவும் கடன் கொடுத்தோர் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கிலிடப்பட வேண்டும் | கடன் கொடுத்தோர் பெறுமதி திருத்தப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டில் 08 செயற்திட்டங்களுக்கு ரூபா 2,470,484 கடன் கொடுத்தோர் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், அவை இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | தேவையான கணக்குச் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும் | யக்கல தப்புவவத்த வீதியின் எஞ்சிய பகுதியில் கொங்கிரீட் இடுதல், செயற்திட்டம் பரிசீலிக்கப்பட்ட போதும் அக்கோவை கிடைப்பதற்கில்லாததால் எஞ்சிய 04 செயற்திட்டங்களும் பல்வேறு காரணங்களால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. |
| (v) | மீளாய்வாண்டில் கெரலப்பிட்டிய கழிவுப் பொருள் பிரிவுக்குக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 10,211,236 தொடர்பாக கடன் கொடுத்தோர் நிதி ஏற்பாடு செய்யபடவில்லை. | சரியான பெறுமதியை கடன் கொடுத்தோராகக் கணக்கிலிட வேண்டும் | பதில் அளிக்கப்படவில்லை |
| (vi) | இழப்பிற்குள்ளாக ரூபா 25,918 கையிருப்பை மீளாய்வாண்டின் கையிருப்புப் பெறுமதியிலிருந்து நீக்ககவில்லை. | இழப்புக்குள்ளான கையிருப்பு கணக்கில் நீக்கப்பட வேண்டும். | அங்கீகாரம் பெறப்பட்டு, கைதவிர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் நீக்கப்படும். |
| (vii) | ஐந்து கணக்கீட்டு விபரங்களது கணக்கு மீதிகளுக்கும் பட்டோலைக்குமிடையே ரூபா 6,188,474 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | குறித்த மீதிகளது வேறுபாடு இணக்கம் செய்யப்பட்டு கணக்கைத் திருத்தம் செய்ய வேண்டும் | பதிவேடுகளுக்கும் கணக்குகளுக்கும் இடையேயான வேறுபாடு திருத்தப்படும் |

## 1.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினக் கடன் கொடுத்தோர் மீதியில் 1-2 ஆண்டுகளுக்குரிய ரூபா 118.7 மில்லியன் 2-5, 5-10 ஆண்டுகளுக்குரிய முறையே ரூபா 58 மில்லியனும் ரூபா 52.2 மில்லியனும் ரூபா 8.4 மில்லியனும் உள்ளடங்கியிருந்தன. | கடன்கொடுத்தோர் மீதி தீர்வு செய்யபட வேண்டும் | நடப்பாண்டின் கடன் கொடுத்தோர் தொகை 2019 ஆம் ஆண்டில் குறைக்கப்படும் |
| (ஆ) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதி ரூபா | நாணாவித வைப்பு மீதி தீர்வு | சகல மீதிகளும் மீளாய்வு செய்யப்பட்டு சொத்துக் |

| | | | |
|---|---|---|---|
| 40.7 மில்லியனாகும். இதிலி 1 -2, 2-5, 5-10 மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் முறையே ரூபா 16.7 மில்லியன், ரூபா 13.1 மில்லியன், ரூபா 4.9 மில்லியன், ரூபா 5.9 மில்லியன் என்பனவாகும். | செய்யப்பட வேண்டும். | | குத்தகை தொடர்பான வைப்புக் கணக்கு இறுதிக் கணக்கில் வேறாகக்காட்டப்படும். |

**1.5 இணங்காமை**

**1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | பெறுமதி | இண்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | | | |
| (அ) | 1971 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க உள்ளுராட்சி நிறுவனங்ள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டம் | | - | ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தீர்வை மீளாய்வு செய்யப்பட வேண்டும் 2011 ஆம் ஆண்டின் பின்னர் அது நடைபெறவில்லை. | சுற்றறிக்கைப் படி இணங்க வேண்டும் | விலைமதிப்புத் திணைக்களத்திற்கு மீளாய்வு தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | | | |
| | (i) | நிதிப்பிரமாணங்கள் 3701 | 113,700 | பெறப்பட்ட முற்பணம் பணி முடிவடைந்ததுடன் தீர்வு செய்யப்படவில்லை | பணி முடிவடைந்தும் தீர்வு செய்யப்பட வேண்டும் | முற்பணத்தை உடனடியாக தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |
| | (ii) | நிதிப் பிரமாணம் 571 | 24,044,424 | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை | காலம் முடிவடைந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் | பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்டு, வருவாயிலிட வேண்டிய மீதிகள் எதிர்காலத்தில் வருவாயிலிடப்படும். |
| (இ) | 1980 டிசெம்பர் 31 ஆற் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளர் சுற்றறிக்கை | | - | குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட வேண்டும் சபையின் | சுற்றறிக்கையுடன் இணங்க வேண்டும் | நிரந்தர தொடர் நடவடிக்கை மூலம் கடைகளுக்கு நாளது வரையாக்கிய மதிப்பீடு பெறப்படும். |

296 கடைகளுக்கு புதிய மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்படவில்லை

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினததிலும் கூடிய வருவாய் ரூபா 144,443,685 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 37,534,964 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய், வருவாய் நிலுவை என்பன.

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரிக்கப்பட்ட வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருவாய்க்கான தோற்றுவாய் | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப்பட்ட வருவாய் | சேகரிக்கப்பட்ட வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 65,472,384 | 68,102,365 | 66,572,748 | 41,758,711 | 63,366,458 | 64,735,067 | 65,825,622 | 40,124,297 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 28,676,282 | 29,410,995 | 32,221,453 | 252,375,123 | 29,302,956 | 37,217,535 | 22,866,353 | 27,765,861 |
| (iii) | வாடகை | 2,747,000 | 5,785,333 | 5,962,971 | 107,087 | 2,517,800 | 4,522,214 | 4,504,214 | 284,725 |
| (iv) | ஏனைய வருவாய் | 297,676,510 | 309,699,030 | 396,787,819 | 114,398,836 | 241,631,844 | 204,862,478 | 274,118,325 | 201,484,454 |

#### 2.2.2 தீர்வையும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட தீர்வை வரியாக ரூபா 66.5 மில்லியனில் ரூபா 48.2 மில்லியன் நடப்பாண்டிற்குரியதாகும். வரி நிலுவையில் பெறப்பட்டது. ரூபா 18.3 மில்லியனாகும். அதற்கேற்ப தீர்வை நிலுவை அறவீடு 45.6 சதவீதமாகும். | வினைத்திறனுடன் தீர்வை நிலுவை அறவிடப்பட வேண்டும் | கம்பஹா மாநகர எல்லைக்குள் சகல நிலுவைகளுக்கும் சிகப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. ரூபா 5,000 இலக்கமிடப்பட்ட நிலுவைகளுக்கும் சொத்துப் பறிமுதல் கடிதம் |

| | | |
|---|---|---|
| | | அனுப்பப்பட்டுள்ளன. நிலுவை அறவீடு ஒட்டுமொத்தமாகக் கண்காணிக்கப்படுகின்றது. |
| (ஆ) 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வை நிலுவை ரூபா 36.36 மில்லியனாகும். இதில் 10 ஆண்டுகளான 1 – 2 ஆண்டுகளான நிலுவைகள் முறையே ரூபா 1.83 மில்லியன் ரூபா 14.37 மில்லியன் ரூபா 12.33 மில்லியன், ரூபா 7.8 மில்லியன் என்பனவாகும். ரூபா ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட 14 மீதிகளும், யக்கல உப அலுவலகத்தில் ரூபா 50,000 க்கு மேற்பட்ட 06 மீதிகளும் இருந்தன. | நிலுவையை முயைாக அறவிட வேண்டும் | தற்போது அறவிடப்பட்டுள்ளது அறவிடப்பட முடியாதவற்றின் சொத்துப் பறிமுதல் செய்யப்படும். |

**2.2.3 வினோத வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிலுவை ரூபா 5,149,577 ஆகும். இதில் 2010 முதல் ஒரு சினிமாக் கொட்டகையில் இருந்து 4,192,178 அறவிடப்பட வேண்டியிருந்தது, | வினைத்திறனுடன் நிலுவையை அறவிட வேண்டும் | வரிப் புறக்கணிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மத்திய பஸ் தரிப்பின் 1 ஆம் கட்ட கடைகளில் ரூபா 304,173 நிலுவையும், 4 ஆம் கட்டத்தின் வாடகைகளில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 67,400, நான்கு மீள் தமையில் ரூபா 12,637 மார்க்கட் சதுக்கக் சபைகளில் ரூபா 3,000 பத்து ஆண்டுகளுக்கு மேலதிக பொதுச் சந்தை 2 ஆம் கட்டத்தில் 4 கடைகளில் க்கு மேற்பட்ட ரூபா 31,250 நிலுவையும் இருந்தன. | வினைத்திறனுடன் நிலுவையை அறவிட வேண்டும் | எதிர்காலத்தில் அறவிடப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2008 தொடக்கம் நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் 48 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 11.11 மில்லியன் ஆகும். போதிய நடவடிக்கை எடுக்கபபட்டதுடன், புதிய மதிப்பீட்டின் படியும் 2008 ஆகஸ்ட் 01 முதல் பணம் செலுத்தாததால் நிலுவை ஏற்பட்டது. | வினைத்திறனுடன் நிலுவையை அறவிட வேண்டும் | 2018 செப்டெம்பர் 10 ஆந் திகதி தண்டப்பணத்துடன் 2 ஆண்டுகளுக்குள் அறவிட வேண்டுமென சபை தீர்மாணித்தது.<br>டிசெம்பர் முதல் செலுத்தப்படும். |
| (இ) | நான்கு யக்கல பழைய வாரச் சந்தைக் கடைகளிலிருந்து ரூபா 678,314 நிலுவை அறவிடப்படாதிருந்தது. | வினைத்திறனுடன் நிலுவையை அறவிட வேண்டும் | 2012 ஒக்டோபர் 08 ஆந் திகதிய (264) சபைத் தீர்மானத்தின் படி புதிய மதிப்பீட்டின் படி வாடகையைச் செலுத்த சலுகை வழங்கப்பட்டது. அது செலுத்தப்படாது நிலுவை ஏற்பட்டது. |
| (ஈ) | சபையின் மத்திய பஸ் நிலையம் மற்றும் கடைத் தொகுதியில் முறையே 22, 23 சபையிலிருந்து முன்னைய மீதியாக ரூபா 36.87 இருந்தது. இவை 2007 முதல் 2017 வரையிலாவை யக்கல கடைத் தொகுதியில் 49 கடைகலிருந்து பழைய மீதியாக ரூபா 63 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. | பழைய மீதிகளை அறவிட வேண்டும் | சலுகைக் காலம் கோரப்பட்டுள்ளது. அது வழங்கப்படுமென அறிவிக்குமாறு 2019 மே 10 ஆந் திகதி சபை தீர்மானித்தது. |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியிலான வர்த்தக அனுமதிப் பத்திரக் கட்டண நிலுவையாகிய ரூபா 84,587 மற்றும் நிலுவையாக இருந்த வர்த்தக வரி மீதியாகிய ரூபா 113,200 என்பவற்றை அறவிடுவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை | நிலுவையாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | முன்னைய வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடப்பட்டு சரியான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் |

### 2.2.6 ஏனைய வருவாய்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தின் 17 நிறுவனங்களது சுற்றாடல் அனுமதிப்பத்திரக் காலம் முடிவடைந்திருந்த போதும் அந் நிறுவனங்கள் மீதான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்குமாறு நிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன. |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் 24 சுற்றாடல் அனுமதிப் பத்திர விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று அவற்றுகாக 12 க்கு அவை வழங்கப்பட்ட போதும், அவை வழங்கப்படாத நிறுவனங்களுக்கு வழங்கப்படாததற்காக காரணம் அறிவிக்கப்படவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் |
| (இ) | அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள சகல தொலைபேசிக் கோபுரங்களுக்கும் வருவாயை அறவிடவும் அவற்றை நிறுவியுள்ள நிறுவனங்களிலிருந்தும் வியாபார வரியை அறவிடவும் நடவடிக்கை எடுக்கவில்லை. | வரி அறவிட வேண்டும் | தீர்வை மீளாய்வு செய்யப்படுவதற்கு வர்த்தக வரி அறவிடப்படுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | 2015 டிசெம்பர் 28 ஆம் திகதிய 1947/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ளடக்கிய உப விதிகளின்படி பிரசார விளம்பர விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்படவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படவில்லை | 2015 டிசெம்பர் 28 ஆம் திகதிய 1947/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ளடக்கிய விண்ணப்பப் படிவம் மீளர்ய்வு செய்யப்பட்டு விண்ணப்படிவங்கள் எதிர்காலத்தில் வழங்கப்படும். |

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாணசபை தலைமைச் செலாவணியிடமிருந்து 2008 ஆம் ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணமாகிய ரூபா 6 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட போதும் பணம் எதுவும் அறவிடப்படவில்லை. | நீதிமன்றத் தண்டப்பணம் அறவிடபடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் | 2018 ஆம் ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப் பணத்தை அறவிடமுடியாதபோதும், 2019 சனவரி 21 ஆந் திகதியளவில் ரூபா |

7,224,184
அறவிடப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 மாநகர சபைகள் அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் தொடர்பாக விடயங்களை ஒழுங்குபடுத்தலும், நிர்வகித்தலும், பொது மக்களது நல்வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற மாநகரசபை நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதிலான விடயங்கள் பின்வருமாறு.

### (அ) உப விதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாநகர சபைகள் அதிகாரச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம் 32 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்கு உப விதிகள் தயாரிக்கபட வேண்டுமாயினும், 2018 டிசெம்பர் 31 ஆந திகதியளவில் 18 விடயங்களுக்கு மாத்திரமே உப பிரிவுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. | தேவையான உப விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1989 -01-20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க வர்த்ததமானியின் மூலம் அறிவிக்கப்பட்ட உப விதிகள் தேவைக்கேற்ப சனபயால் பயன்படுத்தப்படும். |
| (ii) | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான உப விதிகள் தயாரிக்கப்படவில்லை | உப விதிகள் தயாரிக்கப்பட்டு கழிவுப் பொருட்களுக்கான வரி அறவிடப்பட வேண்டும் | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான உப விதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. |

### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபை நிறைவேற்ற வேண்டிய 08 பணிகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | சகல பணிகளும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் | தயாரிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் ஆற்ற வேண்டிய பணிகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படும். |

### (இ) எதிர் பார்த்த தவனைப் பெறாமை

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் யக்கல கடைத் தொகுதியின் முதலாவது கட்டத்தில் 41 கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் 15 கடைகள் மாத்திரமே வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | கடைகளைக் குத்தகைக்கு வழங்கி வருவாயை ஈட்ட வேண்டும் | அமைக்கப்பட்ட 41 கடைகளுக்கும் கேள்விகள் கோரப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. 15 கடைகள் வியாபாரத்தை ஆரம்பித்துள்ளன. எஞ்சிய |

| | | | |
|---|---|---|---|
| | | | கடைகள் 26 தொடர்பான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படும். |
| **(ஈ)** | **கைவிடப்பட்ட பணிகள்**<br>--------------------------------------<br>2003 ஆம் ஆண்டில் ரூபா 5,230,606 செலவில் ஆரம்பிக்கபட்டு நிர்மாணிக்கப்பட்ட மடமவத்தை உள்ளரங்க கைப்பந்து விளையாட்டு மைதானம் 2019 யூன் 24 ஆந் திகதியளவில் கூறையில் கொங்கிரீட் தூன் அமைக்கப்பட்ட நிலையிலே கைவிட்பபட்டிருந்தது. மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் அறிக்கைப் பிரகாரம் பார்வையாளர் கூடமோ அல்லது வேறு தேவையான பணிகளுக்கோ இடவசதி இல்லாதிருந்ததுடன், நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் தூண் கூரையைத் தாங்கக் கூடிய சக்தி அற்றதாகவும் இருந்தது. | செயற்திட்ட நிர்மான வேலைகள் குறித்த காலத்தில் நடைபெற்று நோக்கங்கள் அடையப் பெற வேண்டும் | மடமாவத்தை உள்ளரங்க கைப்பந்து விளையாட்டு மைதானம் தொடர்பான ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கைப் பிரகாரம் அதனை அகற்றுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு சபை தீர்மாணித்துள்ளது. |
| **(உ)** | **பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்**<br>--------------------------------------------------------<br>2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதி ரூபா 1,000,000 மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்ட உலகளாவிய தகவல் முறைமைத் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கம்பஹா மாநகரசபையின் அலுவலக நடவடிக்கைகளின் சுற்றோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 66,000 செலவிடப்பட்டிருந்தது. எனினும், போதிய மதிகவனமின்மை, நிறுவனத்தில் மேற்கொள்ளும் கடமைகளுக்குப் புறம்பாக இச் செயற்திட்டத்திலும் பங்காற்ற வேண்டியுள்ளமை போன்ற காரணங்களால் செயற்திட்டம் நிறைவேறவில்லை. | GIS மென் அணிப் பயன்பாடு வினைத்திறனுடன் நடத்தப்பட வேண்டும் | GIS மென் ஆணிப் பயன்பாட்டை ஒழுங்கபடுத்துவதற்கு மொறட்டுவை பல்கலைக்கழக மதியுரைச் சேவை கோரப்பட்டுள்ளது. |
| **(ஊ)** | **நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கு**<br>--------------------------------------------------------<br>2019 – 2023 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி கூட்டிணைந்த திட்டத்திற்கு வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும், 2018 | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கை அடைய வேண்டும் | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள் சம்பந்தமாக அபிவிருத்திக் கூட்டிணைந்த திட்டம் |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டிற்கான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி செயற்திட்டம் அமுலாக்கப்படவில்லை. | | தடைவிதிக்கப்பட வேண்டும். |

**3.2 மணிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 மே 18 முதல் பொது சுகாதார பரிசோதகர் பதவி ஒன்றும், 2018 டிசெம்பர் முதல் முகாமைத்துவ உதவியாளர் பதவி ஒன்றும், 2015 மார்ச் முதல் வருவாய்ப் பரிசோதகர் பதவிகள் இரண்டும், தொழில் நுட்ப உத்தியோகத்தர் பதவி ஒன்றும் 2017 சனவரி 20 முதல் மருத்துவ உத்தியோகத்தர் பதவி ஒன்றும் வெற்றிடங்களாக இருந்தன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | இரண்டு வருவாய் பரிசோதகர்கள் தவிர ஏனையவை நிரப்பட்டுள்ளன |
| (ii) | பத்து ஆண்டுகளுக்கு மேலாக 34 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியுள்ள ரூபா 264,105 கடன் மீதிகளுடன் வேலை இடமாற்றத்திற்குள்ளான ஆறு பேர்களிடமிருந்து ரூபா 9,509 கடன் மீதியும் இலங்கை மின்சார சபையில் பணியில் அமர்த்தப்பட்ட 7 பேரிடமிருந்து ரூபா 35,170 என கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | கடன் மீதி அறவிட வேண்டும் | குறித்த கடன் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபையாக 10930 சொத்துக்களுக்கான தீர்வை 2011 ஆம் ஆண்டிலும் யக்கல உப அலுவலகத்தில் 20130 சொத்துக்கள் 2006 ஆம் ஆண்டிலும் பெறுமதியிடப்பட்டு முறையே 7 ஆண்டுகள், 11 ஆண்டுகள் ஆகியிருந்தன. இச் சொத்துக்களின் தற்போதைய பெறுமதியின் அடிப்படையில் பெறுமதி மீளாய்வு | தீர்வை அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட வேண்டும் | புதிய சொத்துக்களை இனங்கண்டு தீர்வையை அறவிடுதல், சொத்து ஒப்படைப்பின் மீது புதிய மதிப்பீட்டைத் தயாரித்தல், குடியிருக்கும் சொத்துக்கள் வணிகமய சொத்துக்களாக மாற்றமடைதல் போன்ற காரணங்களால் மேற்படி மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. |

செய்யப்பட்டதுடன், 31,060 தீர்வைக் கடன்களிலிருந்து அறவிடப்படக்கூடிய நாளதுவரையாக்கப்பட்ட வரி அறவிடப்படாதிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி அமைச்சினால் மாநகர சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 30,069,519 பெறுமதியான 04 மோட்டார் வாகனங்களைச் சுவீகரிப்பதற்கு 2019 யூன் 27 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இவ் வாகனங்களை மாநகரசபை சுவீகரிக்க வேண்டும் | வாகனங்கள் நகர சபைக்கு வழங்கப்படும் |

#### 3.4.2 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா பொதுச் சந்தையில் உள்ள மொத்த, சில்லறை வர்த்தகக் கூட்டுத் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 28 கடைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | பொருளாதார நலனைப் பெறுவதற்கு சபையின் சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும் | அங்கு வர்த்தகச் சந்தை நிலைமை இல்லாமை காரணமாக கேள்விகள் கோரப்படவில்லை |
| (ஆ) | சபைக்குரிய முச்சக்கர வண்டி 2016 மார்ச் 19 ஆந் திகதி ஏற்பட்ட வாகன விபத்து காரணமாக பயன்படுத்தப்படாது மாநகரசபை வளாகத்தில் இருந்தது. வண்டிக்குரிய காப்புறுதிப் பத்திரம் 2019 யூன் 27 ஆந் திகதியளவிலும் பெறப்படவில்லை. | காப்புறுதிப் பத்திரத்தை துரிதமாகப் பெற வேண்டும் | காப்புறுதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.4.3 வருடாந்த பொருள் / கையிருப்பு சரி, பிழை பார்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் கணிப்பின் பிரகாரம் பெறுமதி குறிப்பிடப்படாத 429 அலுவலக உபகரணங்களும் தளபாடங்களும் குறைவாக இருந்தன. 87 பொருட்கள் மிகையாக இருந்தன. குறைவுகள், மிகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறைவுகள், மிகை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருள் கணிப்புச் சபையினரின் அறிவுறுத்துரைப்படி குழு ஒன்று நியமிக்கப்பட்டு மிகை தொடர்பாக எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும். |

### 3.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியத்தின் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குமான பங்களிப்பு தாமதமாகியதால் முறையே ரூபா 412,677 மற்றும் ரூபா 216,150 என தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | தாமதமின்றி பங்களிப்புத் தொகை வழங்கப்பட வேண்டும் | சபை செலுத்தியிராத சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புக்கள் தவனை ரீதியில் செலுத்தப்பட்டிருந்தன. |

### 3.6 பொருட் கொள்வனவு

### 3.6.1 பொருட் கொள்வனவுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பொருள் கொள்வனவுத் திட்டத்தின்படி செய்வதற்கிருந்த இயந்திர வாகனங்களும் உபகரணங்களும் முறையே ரூபா 1,224,575 மற்றும் ரூபா 284,075 பெறுமதி உடையவையாகும். ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களதும் இயந்திர சாதனங்களதும் பெறுமதி முறையே ரூபா 5,531,641 மற்றும் ரூபா 8,669,160 என்பனவாகும் | கொள்வனவுத்திட்டத்தின் படி கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை |

### 3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 04 வீதிகளில் கொங்கிரீட் பதிப்பதற்கு ரூபா 727,827 வழங்கப்பட்டிருந்தது. அவ்வீதிகளில் மதிப்பீட்டின்படி பயன்படுத்திய கொங்கிரீட்டினது அழுத்த சக்தியும் கன அளவும் ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை | கொடுப்பனவு செய்யும் போது அழுத்த சக்தி ஆய்வு கூடப்பரிசோதனைப்படி அமைய வேண்டும் | குறித்த 04 செயற்திட்டங்களது பொறியியல் மதிப்பீட்டில் ஆய்வுகூட அறிக்கை உள்ளடக்கப்படவில்லை. |

## 4. கணக்களிப் தகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வரவு செலவுத்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டினது வரவு, செலவுத் திட்டதின்படி 37 செலவிடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 8.7 மில்லியன் முற்றாகவே சேமிப்புக்குள்ளனது. | எதிர்பார்த்த திட்டம் சரிவர இணங்காணப்பட்டு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை |
| (ஆ) சபையின் நிதியத்தின் மூலம் நிறைவேற்ற எதிர்பார்த்த 21 செயற்திட்டங்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 6,947,842 ஒதுக்கப்பட்டபோதும் ஆண்டின் போது ரூபா 3,700,526 பெறுமதியான 12 செயற்திட்டங்களை நிறைவேற்றயிருந்தன. | செயற்திட்டங்கள் ஆண்டின்போது நிறைவேற வேண்டும் | பதில் வழங்ப்படவில்லை |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் முதல் 06 மாதங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டம் நடைபெறவில்லை யூன் 10 மற்றும் டிசெம்பர் 17 ஆகிய திகதிகளில் 02 குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருந்தன | குறித்தபடி கூட்டங்கள் நடைபெற வேண்டும் | 2018 ஆம் ஆண்டில் 02 கணக்காய்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |